இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 20.08.2026

# கர்நாடகாவில் 3 தமிழர்கள் படுகொலை!

கர்நாடக மாநிலம் சாம்ராஜ்நகர் மாவட்டத்தில் ஹன்னூர் வனப்பகுதியில் 3 தமிழர்கள் கர்நாடக வனத்துறையினரால் சிறிதும் ஈவு இரக்கமின்றி துப்பாக்கியால் சுட்டுக் கொல்லப்பட்டு உள்ளார்கள்.

வழிதவறிய தங்களின் மாடுகளைத் தேடி வந்தவர்களை, மான் வேட்டைக்கு வந்தவர்கள் என்றுகூறி கர்நாடக வனத்துறை சுட்டுக்கொன்றுள்ளது.

'இந்த விவகாரத்தில் எனக்கு முரண்பட்ட தகவல்கள் வந்து கொண்டு இருக்கிறது' என்கிறார் கர்நாடக மாநில முதலமைச்சர் டி.கே.சிவக்குமார். முதலமைச்சர் பதவியில் இருந்துகொண்டு இப்படிச் சொல்வதற்கு அவருக்கு வெட்கமாக இல்லையா?

**'கர்நாடக நிர்வாகத்தில் தமிழ்நாடு தலையிடக் கூடாது' என்று ஆணவமாகச் சொல்லி இருக்கிறார். அவர் அந்த மாநில மக்களுக்கு நல்லது செய்தால் நாம் ஏதாவது கேட்கிறோமா? தமிழர்களைச் சுட்டுக் கொண்டே இருந்தால் அதைப் பார்த்து வேடிக்கை பார்க்க முடியுமா? தமிழ்நாட்டுக்கு தர வேண்டிய காவிரி நீரைத் தரமறுத்தால் தட்டிக் கேட்கக் கூடாதா? காவிரி தண்ணீரைத் தடுக்க அணைக் கட்டினால் எதிர்ப்பு தெரிவிக்கக் கூடாதா? கர்நாடகா ஏதோ தனி நாடு போல பேசுகிறார் டி.கே.சிவக்குமார்?**

**'மாடுகளைத் தேடி வந்தவர்கள்தான் இம்மூவரும்' என்று இறுதியில் முடிவானால் கொல்லப்பட்டவர்களைப் பிழைக்க வைக்க முடியுமா மாண்புமிகு முதலமைச்சர் டி.கே.சிவக்குமாரால்?**

வழிதவறிய மாடுகளைத் தேடி வந்த தமிழர்களை, மான் வேட்டையாட வந்தவர்கள் என்று கர்நாடக வனத்துறை எந்த ஆதாரத்தின் அடிப்படையில் முடிவெடுத்தது? அதற்காக உடனே சுட்டுவிடுவீர்களா? அதுதான் கர்நாடகாவில் சட்டமா? மான்வேட்டையாட கர்நாடகாவைச் சேர்ந்த கன்னடர்கள் வந்திருந்தால், அவர்களை கர்நாடக காங்கிரஸ் அரசாங்கம் சுட்டுவிடுமா? சுட்டுவிட்டுத் தான் ஆட்சியில் இருக்கமுடியுமா? தமிழ்நாட்டில் கையாலாகாத, முதுகெலும்பற்ற அரசாங்கம் இருக்கிறது, அந்த அரசாங்கம் இதுபற்றி எல்லாம் கேட்காது என்று நினைத்துத்தான் கர்நாடக காங்கிரஸ் அரசாங்கம் 3 தமிழர்களை இரக்கம் இல்லாமல் சுட்டுள்ளது.

**வனப் பகுதியில் அத்துமீறி நுழைந்திருந்தால் வழக்கு போடுங்கள். கைது செய்யுங்கள். நீதிமன்றத்தின் முன் நிறுத்துங்கள். குற்றவாளிகள் என்று நீதிமன்றம் தீர்ப்புத் தரட்டும். இவை அனைத்தையும் விட்டுவிட்டு, 'பார்த்ததும் சுடுவது' என்றால் அது அரச பயங்கரவாதம் அல்லவா? அப்படி கட்டற்ற அதிகாரத்தைக் காவல்துறைக்கு கொடுத்துள்ளதா கர்நாடக காங்கிரஸ் அரசு?**

**இதுதொடர்பாக கர்நாடகா வனத்துறையினர் கூறுகையில், "வனப்பகுதிக்குள் மான் வேட்டையாடி இறைச்சியைப் பிரித்துக் கொண்டிருந்த கும்பலை வனத்துறையினர் சுற்றி வளைத்துள்ளனர். அப்போது அவர்கள் நாட்டுத் துப்பாக்கியால் வனத்துறையினர் மீது தாக்குதல் நடத்தியதால், தற்காப்புக்காக வனத்துறையினர் நடத்திய பதிலடித் துப்பாக்கிச் சூட்டில் 3 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்" என்று வழக்கம்போல கதை கட்டி இருக்கிறார்கள்.**

கர்நாடகா வனத்துறையால் சுட்டுக் கொல்லப்பட்ட அந்தோனிசாமி, பீட்டர், குமார் ஆகிய மூவரும் தமிழ்நாட்டை ஒட்டியுள்ள சாம்ராஜ்நகர் மாவட்டம் தேமையார்பாளையம், மாரியமங்கலம் பகுதியைச் சேர்ந்த தமிழர்கள். கர்நாடகா வனத்துறையால் தமிழர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் எல்லை மாவட்டங்களில் பதற்றத்தை ஏற்படுத்தி உள்ளது. மாரியமங்கலத்தைச் சேர்ந்த பெஞ்சமின் என்பவரின் மகன் மகிமைதாஸ் காயமடைந்துள்ளார்.

**"வனத்துறை அதிகாரிகள் சொல்வது அனைத்தும் முரண்பாடாக உள்ளது. அவர்களது தரப்பில் குளறுபடிகள் உள்ளன. துப்பாக்கிச் சூடு நடத்துவதற்கு எந்தக் காரணமும் இருக்கவில்லை. இதற்கு உயர் அதிகாரிகள் அனுமதி அளிக்க வில்லை." என்று ஹன்னூர் எம்.எல்.ஏ. மஞ்சுநாத் செய்தியாளர்களிடம் கூறினார். இதற்கு கர்நாடக அரசின் பதில் என்ன?**

**"இது ஒரு என்கவுண்டர் சம்பவம்" என கர்நாடக வனத்துறை அமைச்சர் ராமலிங்கா ரெட்டி சொல்லி இருக்கிறார். அப்படியானால் அவர்கள் குற்றவாளிகள் என்று முடிவெடுத்து சுடச் சொன்ன அதிகாரி யார்? கர்நாடக ஆட்சி மேலிடத்தின் அனுமதியுடன் தான் இக்கொலை நடந்ததா?**

ஹன்னூர் எம்.எல்.ஏ மஞ்சுநாத், மாவட்டப் பொறுப்பு அமைச்சர் புட்டரங்கா ஷெட்டி ஆகியோர், "அதிகாலை நேரத்தில் என்கவுன்டருக்கான தேவை ஏன் வந்தது?" என்று கேள்வி எழுப்பி இருப்பதாக கர்நாடக மாநில செய்தி நிறுவனங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. வனத்துறை அமைச்சர் சொல்வதும், மாவட்டப் பொறுப்பு அமைச்சர் சொல்வதும் முரண்பாடாக உள்ளதே?

இவ்வளவுக்குப் பிறகும் தமிழ்நாட்டை ஆளும் அரசு கண்ணை மூடி, கையைக் கட்டி மவுனமாக ஏன் இருக்கிறது? கர்நாடக மாநில காங்கிரஸ் அரசைப் பார்த்து பயமா?

**"கர்நாடகாவில் 3 தமிழர்கள் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தில் தமிழ்நாடு அரசு அதிகாரப்பூர்வமாக எந்தக் கண்டனத்தையும் வெளி யிடாமல் இருப்பது அதிர்ச்சி அளிக்கிறது" என்று எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி சொல்லி இருக்கிறார். "சட்டப்பேரவையில் இந்த விவகாரம் தொடர்பாக பதிலளித்த அமைச்சரும், கர்நாடகத்தின் Version-ஐயே எதிரொலித்தார். தமிழ்நாடு அரசு சார்பிலோ, முதலமைச்சர் சார்பிலோ கர்நாடக முதலமைச்சரிடம் விளக்கம் கேட்டு எந்த வொரு கடிதமும் இதுவரை எழுதப்படவில்லை. த.வெ.க. தலைவர் என்கிற நிலையில் பட்டும் படாமல் ஒரு அறிக்கையை மட்டும் வெளியிட்டு இருக்கிறார்கள்." என்று விஜய் அரசாங்கத்தின் கோழைத்தனத்தை அம்பலப்படுத்தி இருக்கிறார் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி.**

சட்டசபையில் இதுதொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி கேட்ட போது, அமைச்சர் நிர்மல்குமாரால் ஒழுங்கான பதிலைச் சொல்ல முடியவில்லை. "கர்நாடக அரசு உரிய விசாரணை நடத்தி வருகிறது. கர்நாடக அரசு உரிய விசாரணை நடத்தி வருவதால் அதில் குறுக்கிடத் தேவையில்லை" என்று சொல்வதற்கு தமிழ்நாட்டில் அமைச்சர் பதவி எதற்கு? கர்நாடகாவில் வேறு வேலைக்கு போய் விடலாமே?

மூவர் கொலை குறித்து தேசிய மனித உரிமைகள் ஆணையத்தில் புகார் அளிக்க வேண்டும் என்ற கோரிக்கையை நிராகரித்தது த.வெ.க. அரசு. சி.பி.ஐ. விசாரணை வேண்டும் என்ற எதிர்க்கட்சிகளின் கோரிக்கையையும் நிராகரித்தது த.வெ.க. அரசு. தமிழ்நாட்டில் எத்தகைய கேவலமான அரசு அமைந்துள்ளது என்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டு.

**3 தமிழர்கள் கொலை செய்யப்பட்டதை கொலை வழக்காக பதிவு செய்து சி.பி.ஐ. விசாரிக்க வேண்டும். தொடர்புடைய அனைத்து அதிகாரிகளும் பணி நீக்கம் செய்யப்பட வேண்டும். மூவர் குடும்பத்துக்கு உடனடியாக கர்நாடக அரசு இழப்பீடு வழங்க வேண்டும்.**

**கர்நாடக காங்கிரஸ் அரசுக்கு த.வெ.க. அரசு எச்சரிக்கை விடுக்க வேண்டும்.**

••

## கர்நாடக வனத்துறையினரால் 3 தமிழர்கள் சுட்டுக் கொலை:
## தென் மாநில முதல்வர்கள் கூட்டத்தின்போது

# கர்நாடக முதல்வரை சந்தித்து உரிய விளக்கத்தை தமிழ்நாடு முதல்வர் கேட்க வேண்டும்!

## சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் வலியுறுத்தல்!

சென்னை, ஆக.20-

தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ட்விட்டர் பதிவு வருமாறு:-

கர்நாடகாவில் மூன்று தமிழர்களை அம்மாநில வனத்துறையினர் சுட்டுக்கொன்ற சம்பவம் தொடர்பாக தமிழ்நாடு அரசு சார்பில் அதிகாரப்பூர்வமாக எந்தக் கண்டனத்தையும் வெளியிடாமல் இருப்பது அதிர்ச்சி அளிக்கிறது.



சட்டப்பேரவையில் இந்த விவகாரம் தொடர்பாக பதிலளித்த அமைச்சரும், கர்நாடகத்தின் Versionஐயே எதிரொலித்தார்.

தமிழ்நாடு அரசு சார்பிலோ, முதலமைச்சர் சார்பிலோ கர்நாடக முதலமைச்சரிடம் விளக்கம் கேட்டு எந்தவொரு கடிதமும் இதுவரை எழுதப்படவில்லை.

**நீதி விசாரணையை தமிழ்நாடு அரசு கோர வேண்டும்!**

த.வெ.க. தலைவர் என்கிற நிலையில் பட்டும் படாமல் ஒரு அறிக்கையை மட்டும் வெளியிட்டு இருக்கிறார்கள்.

இந்தச் சூழலில் சென்னையில் நாளைய தினம் தென் மாநில முதலமைச்சர்கள் கூட்டம் கூடுகிறது. அந்தக் கூட்டத்தின் போது, கர்நாடக முதலமைச்சரை சந்தித்து, இந்தச் சம்பவம் தொடர்பாக தமிழ்நாடு முதலமைச்சர் உரிய விளக்கத்தைக் கேட்டுப் பெற வேண்டும்.

இந்த வழக்கு விசாரணையை கர்நாடக காவல்துறை விசாரிப்பதற்குப் பதிலாக நம்பகமான நீதி விசாரணை நடத்திட தமிழ்நாடு அரசு கோர வேண்டும்.

**உயிரிழப்புக்கு காரணமானவர்கள் மீது கடும் நடவடிக்கை வேண்டும்!**

இந்த சம்பவத்தில் நடைபெற்றுள்ள மனித உரிமை மீறல்கள் தொடர்பாக தேசிய மனித உரிமைகள் ஆணைய வழிகாட்டுதல்கள் மற்றும் உச்சநீதிமன்ற தீர்ப்புகள் அடிப்படையில் இந்த உயிரிழப்புகளுக்குக் காரணமானவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க தமிழ்நாடு அரசு வலியுறுத்த வேண்டும்.

மேலும், பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினருக்கு கூடுதல் இழப்பீடு தரப்படுவதை உறுதி செய்ய கர்நாடக முதலமைச்சரிடம் தமிழ்நாட்டு முதலமைச்சர் வலியுறுத்த வேண்டும்.

இவ்வாறு தமிழ்நாடு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் தமது ட்விட்டர் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

## த.வெ.க. அரசின் அலட்சியம்:

# கழக ஆட்சியில் ரூ.300 கோடியில் கட்டப்பட்ட பெரியார் நூலகம் விரைவில் திறக்க வேண்டும்!

## போட்டி தேர்வர்கள் கோரிக்கை!

**கோவை, ஆக.20-**

**கோவையில் ரூ.300 கோடி செலவில் பிரம்மாண்டமாக அமைக்கப்பட்டுள்ள பெரியார் நூலகம் திறப்பில் இழுபறி நீடிக்கிறது. தமிழ்நாடு அரசின் பள்ளி கல்வித்துறை மற்றும் நூலகத்துறை சார்பில், கோவை காந்திபுரத்தில் ரூ.300 கோடி மதிப்பீட்டில் தந்தை பெரியார் அறிவுலகம் என்னும் பிரம்மாண்ட நூலகம் கட்டுமான பணி கடந்த தி.மு.க. ஆட்சியில் துவங்கப்பட்டது. மொத்தம் 6 ஏக்கர் 98 சென்ட் நிலத்தில் 1.98 லட்சம் சதுர அடி பரப்பளவில் தரை மற்றும் ஏழு தளங்களுடன் இக்கட்டிடம் உருவானது. இதன் தரை தளத்தில் ஆடிட்டோரியம் மற்றும் அறிவியல் மையம் அமைக்கப்பட்டுள்ளது.**




முதல் தளத்தில் அறிவியல் மையம், இரண்டாம் தளத்தில் குழந்தைகளுக்கான நூலகம் மற்றும் போட்டி தேர்வுகளுக்கான நூலகம், மூன்றாம் தளத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கான நூலகம் மற்றும் தலைமை நூலகர் அலுவலகம், 4ம் தளத்தில் தமிழ் புத்தகப் பிரிவு மற்றும் சொந்த புத்தகம் படிக்கும் பிரிவு, ஐந்தாம் தளத்தில் தமிழ் புத்தகப்பிரிவு மற்றும் இன்ஃபர்மேஷன் சென்டர், 6ம் தளத்தில் பருவ இதழ்கள் மற்றும் இன்குபேஷன் சென்டர், 7வது தளத்தில் அறிவியல் மையம், ஆங்கில புத்தகப் பிரிவு மற்றும் டிஜிட்டல் நூலகம் ஆகியவை அமைக்கப்பட்டு வந்தது. தற்போது, இவற்றில் பெரும்பாலான பணிகள் நிறைவடைந்து விட்டன.

புத்தகங்கள் மற்றும் இபுத்தகங்கள் என சுமார் ரூ.50 கோடிக்கும், கணினி, இதர உபகரணங்கள் மற்றும்தொழில்நுட்ப உள்கட்டமைப்பு வசதிகள் ரூ.5 கோடிக்கும் என அசத்தலான உள்கட்டமைப்பு வசதி உருவாக்கப்பட்டுள்ளது. பெரியார் நூலகத்தை கடந்த ஜனவரி மாதத்தில் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால், 100 சதவீத கட்டுமான பணிகள் முடியாத நிலையில், பணிகளை விரைந்து முடிக்க உத்தரவிடப்பட்டது. இதற்கிடையில், ஆட்சி மாற்றம் ஏற்பட்ட நிலையில், நூலகம் கட்டுமான பணிகளில் தொய்வு ஏற்பட்டது. கடந்த மே மாத இறுதியில் இந்த பெரியார் நூலகம் திறக்க ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால், தற்போது வரை இக்கட்டிடம் திறக்கப்படாமல் இருக்கிறது.

இந்நிலையில், தமிழ்நாடு சட்டமன்றத்தில், பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலைத்துறை மீது நேற்று நடந்த மானிய கோரிக்கை விவாதத்தின்போது, திமுக எம்எல்ஏ எ.வ.வேலு, "கோவை பெரியார் நூலகம் கட்டுமான பணிகள் திமுக ஆட்சியில் 95 சதவீதம் முடிவடைந்து விட்டது. அமைச்சர் ஆதவ் அர்ஜூனாகூட நேரில் ஆய்வு செய்தார். பெரியார் தங்களின் கொள்கை தலைவர் என தம்பட்டம் அடிக்கும் தவெகவினர், ஏன் பெரியார் பெயரில் கொண்டு வரப்பட்ட நூலக பணிகளை நிறுத்தியுள்ளனர். ஆட்சிக்கு வந்து 3 மாதமாகியும் நூலகம் இன்னும் பயன்பாட்டிற்கு வராமல் இருப்பது ஏன்?" என கேள்வி எழுப்பினார்.

இந்த கேள்விக்கு துறை அமைச்சர் உள்பட யாரும் சரியான விளக்கம் அளிக்கவில்லை. இதனால், இந்நூலகம் எப்போது திறக்கப்படும்? என தெரியாத நிலை இருக்கிறது. இந்நிலையில், தமிழ்நாடு தேர்வாணையம் சார்பில் நடத்தப்படும் போட்டித்தேர்வுகள் தற்போது நடந்து வருகின்றன். அதற்கு தயாராகி வருவதால் பெரியார் அறிவுலகம் கட்டிடத்தை விரைந்து திறக்க வேண்டும் என இளைஞர்கள் மற்றும் போட்டித் தேர்வுக்கு தயாராகி வரும் தேர்வர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து பொதுப்பணி துறை அதிகாரிகள் கூறுகையில், "கட்டுமான பணிகள் முடிந்துவிட்டது. நூலகத்திற்கு என சுமார் 80 ஆயிரம் புத்தகங்கள் வந்துள்ளன. கட்டிடம் திறப்பு விழாவுக்கு தயார் நிலையில் இருக்கிறது. ஆனால், கட்டிடம் திறப்பதற்கான எந்தவித அறிவிப்பும் அரசு சார்பில் தற்போது வரை வரவில்லை. அரசின் அறிவிப்பிற்காக காத்திருக்கிறோம். அடுத்த மாதம் 17ம்தேதி பெரியார் பிறந்த நாளில் இந்நூலகம் திறக்கப்பட வாய்ப்பு இருக்கிறது" என்றனர்.

# நீட் தேர்வு மோசடியைத் தடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன?

## ஒன்றிய அரசுக்கு - உச்ச நீதிமன்றம் கேள்வி

புதுடெல்லி, ஆக.20-

நீட் தேர்வில் நடைபெறும் தொடர் மோசடிகளுக்கு எதிராக அகில இந்திய மருத்துவர்கள் கூட்டமைப்பு தொடர்ந்த வழக்கு உச்ச நீதிமன்றத்தில் இன்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது நீட் மோசடியை தடுக்க போதுமான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஒன்றிய அரசின் சொலிசிட்டர் ஜெனரல் தெரிவித்தார். அதனை ஏற்க உச்ச நீதிமன்றம் மறுத்து விட்டது. உச்ச நீதிமன்ற உத்தரவுபடி அமைக்கப்பட்ட ராதாகிருஷ்ணன் குழுவின் பரிந்துரைகளை இதுவரை ஏன் செயல்படுத்தவில்லை? தேர்வு நடைமுறையில் பல குறைபாடுகள் உள்ளது, தேசிய தேர்வு முகமையின் செயல்பாடு போதுமானதாக இல்லை என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது, அதனை ஏன் இன்னும் சரிசெய்யவில்லை? என்று கேள்வி எழுப்பினர். தேசிய தேர்வு முகமைக்கு நிரந்தர நிர்வாகிகள் சரமாரியாக அதிகாரிகள் நியமிக்கப்பட வேண்டும், அதனை வலுவான நிறுவனமாக முதலில் மாற்ற வேண்டும் என்று உச்சநீதிமன்றம் தெரிவித்தது. ஒரு குழுவின் பரிந்துரைகளை இதுவரை செயல்படுத்தாமல் தற்போது புதிய குழு அமைக்கப்பட்டுள்ளது, முந்தைய குழுவின் பரிந்துரைகளை புதிய குழு ஆய்வு செய்து அதனையும் சேர்த்து செயல்படுத்த வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் தெரிவித்தது. நீட் கேள்விகளை AI மூலம் மொழிபெயர்ப்பு செய்தது தவறான நடைமுறை என்றும் மொழிபெயர்ப்புக்கு ஏ.ஐ தொழில்நுட்பத்தை நம்ப முடியாது என்றும் உச்சநீதிமன்ற நீதிபதிகள் தெரிவித்தனர். பின்னர், நீட் தேர்வு நடைமுறையை மேம்படுத்துவதற்கு என்ன நடவடிக்கைகள் இதுவரை எடுக்கப்பட்டுள்ளது என்பது குறித்து ஒன்றிய கல்வித்துறை பிரமாண பத்திரம் தாக்கல் செய்ய உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டு, வழக்கை ஒத்திவைத்தது.